R 4658

# The Camel and The Needle's Eye

## ஊசியின் காதினிலே

உயரமாகவே சுமை மிக ஏற்றியே

ஒலிமுக வாயிலின் கதவருகினிலே
ஒட்டக மீதினில் அமர்ந்தே வந்தே நின்றேனே,

ஊசியின் காதினைப்போன்றேதான்
திட்டிவாசலும் இருந்ததுவே,

உள்ளே காணும்பெருநகரோ, மிகவும் அழகாய் விளங்கியதே,

நானும் என் ஒட்டகமும் உள்ளே செல்லவே,
வரிசையில் நின்றோம்

சுமைதூக்கும் நண்பரோ, என் சுமையினை முழுதும்

இறக்கிவைக்கவே வேண்டும் என்றே

உரத்த சத்தமாய் இரைந்தே கூவினாரே,

தற்பெருமை எனும் பொதியினை முதலாய்

இறக்கி வெளியினில் வீசு என்றாரே,
அதனை வீசிய பின்னும்தான் சுமை என்னவோ குறையவே
இல்லையே, திட்டிவாசலோ உள்ளே நுழையவும்கூடாது
போன்றே மிகவும் குறுகலாய் அமைந்ததுவே,
இன்னும்கூட குறைக்கவேண்டியே, சுமைதூக்கி என்னை

தன்னலம் என்ற கூடையைக்கூட
இறக்கச்சொல்லியே பணித்தாரே.

கீழ்ப்படிந்தோனாய் ஆரவாரமாய் அதனையும் இறக்கியே
வைத்தபின்னும், நாங்களிருவரும் வாயிலினுள்ளே,

நுழைவதற்கில்லை. சுமைதூக்கி வியந்தே, ஆஹா, உனக்குப்
பொருளாசை உள்ளதோ?,

சிறிதளவேனும் தங்கத்தின்மீதே பற்றுக்கொண்டிருந்தால்
அதையும் தூக்கி எறிந்துவிடு,

எறிந்தபின்னே ஆச்சர்யம் அன்றோ,
ஒட்டகம் சிறிதாய் சுருங்கக்கண்டேன்,

ஊசியின் காதினில் நுழைந்திடக்கண்டேன்,
என் ஒட்டகம் முற்றிலும் ஊசியின் காதினில்

எளிதாய் நுழைய இயன்றதுவே,
குறுகலான அந்தத் திட்டிவாசலில் எளிமையாகவே

நுழைந்தேனே, அழகிய நகரில் இடம்பிடித்தேனே,
தேவனுக்கே நன்றி!

---